IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.179/2015

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | ANURADHA |
| HUSBAND NAME | : | PRATHAPKUMAR |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22nd day of June 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1வது எதிரி எனது கணவர் ஆவார். மற்ற எதிரிகள் எனது கணவரின் உறவினர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் தேவையில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 27.10.2010 ஆம் தேதி அன்று எனக்கும், பிரதாப்குமார் என்பவருக்கும் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின்போது 45 சவரன் நகையும், 5 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களையும் திருமணத்திற்கு பின்னர் எனது கணவரின் மூத்த சகோதரி ரூ.9 லட்சம் வரதட்சணை கேட்டதாகவும், வரதட்சணை கேட்டு அடிக்கடி பிரச்சனை செய்ததாகவும், திருமணத்திற்கு முன்பு அளித்த 35 சவரன் நகைகளை அடகு வைத்துவிட்டதாகவும், எனது மாமனாரும், அவரது மகள்களும் என்னை பலமுறை ரூ.9 லட்சம் வரதட்சணை கேட்டு அடித்து கொடுமை செய்ததாகவும், அதனை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவர்களுக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.